என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்குது

Revive Me – Psalm 119 (Daleth)

Album 29 Song 5 | ஆல்பம் 29 பாடல் 5





என் ஆத்துமா மண்ணோடு
ஒட்டிக்கொண்டிருக்குது...

My soul clings to the dust...

Revive me according
to Your word...

நீர் சொன்ன வார்த்தையினால்
என்னை உயிர்ப்பியும்...

என் ஆத்துமா மண்ணோடு

SUN DATE 04 | 06 | 2007 119 சங்கீதம் - டாலெத் (25 - 32)

என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது
உமது வசனத்தால் என்னை உயிர்ப்பியும்
சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்து போகிறது
உமது வசனத்தால் என்னை எடுத்து நிறுத்தும்

பொய்வழியை என்னைவிட்டு விலக்கிடும்
உம்முடைய வேதத்தை எனக்கு அருளிடும்
மெய்வழியை எனக்கு தேர்ந்து காட்டிடும்
உம்முடைய நியாயத்தை எனக்கு முன்பாய் நிறுத்திடும்
(என் ஆத்துமா)

உமது பிரமாணங்களை எனக்கு போதியும்
உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்திடும்
உமது அதிசயங்களை நான் தியானிக்கச் செய்யும்
உமது கற்பனைகளின் வழியாக ஓடச்செய்யும்
(என் ஆத்துமா)

என் இருதயத்தை சத்தியத்தாலே விசாலமாக்கிடும்
உமது சாட்சிகள் மேல் பற்றுதலாய் இணைக்கச் செய்திடும்
உம்முடைய நீதியை எனக்கு நிலைநிறுத்திடும்
உம்முடைய உடன்படிக்கையை கைக்கொள்ள செய்திடும்
(என் ஆத்துமா)

Remnant Tamil Worship

